**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | |
|---|---|
| Case No. | : CC No.701/2023 |
| Deposition of witness for Prosecution | : P.W-5 |
| Name | : அஜித்குமார், வயது 25 |
| Father Name/Husband Name | : ராதாகிருஷ்ணன் |
| Village | : தூத்துக்குடி |
| Taluk | : தூத்துக்குடி |
| Calling | : பட்டதாரி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of February 2025.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தூத்துக்குடியில் வசித்து படித்து வருகிறேன். வழக்கில் இறந்த தர்மராஜ் எனது அண்ணன். எனது அண்ணன் கடந்த 30.04.2023 ஆம் தேதி மந்திதோப்பிற்கு இருச்சக்கர வாகத்தில் ஒரு விழாவிற்கு சென்றுவிட்டு திரும்பி வரும் போது கிழவிப்பட்டி அருகே வேன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு தெரிந்து கொண்டேன்.
2. அவரை நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அவர் உயிருடன் இல்லை. அவர் உடல் மீது நடந்த பிரேத விசாரணையின் போது உடன் இருந்தேன். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. விபத்து சம்பந்தமான தகவலை உங்களுக்கு யார் சொன்னார் என்றால் எனது நண்பர். அவருக்கு எப்படி தகவல் கிடைத்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் விபத்து நடந்த இருந்த நபர் எனது நண்பருக்கு தகவல் சொல்லியுள்ளார்
2. வழக்கு சம்பந்தமாக உங்கள் நண்பரையும் உங்களையும் போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் அரசு மருத்துவமனைக்கு வந்த போது பரமசிவம், ஊர்க்காவல்சாமி

ஆகியோரும் அரசு மருத்துவமனையில் இருந்தார்கள் என்றால் சரிதான்.

3. அவர்களை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் அவர்களை விசாரித்தார்கள். அவர்களிடம் புகார்மனு எதுவும் வாங்கினார்களா என்றால் அது எனக்கு தெரியாது. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் நீங்கள் சம்பவம் பற்றி கேள்விப்பட்டதாக சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல.
4. வழக்கில் இறந்த நபர் உங்கள் அண்ணன் என்பதால் வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றாலும் வழக்கில் நஷ்ட ஈடு பெற வேண்டியும் பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.